

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் நிறைவு விழாவை முன்னிட்டு செஞ்சியில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர் திறந்து வைத்தனர். அருகில் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச்செல்வன்,மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் ,பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### ரூ.4 கோடியே 37 இலட்சம் மதிப்பீட்டில்

# தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு துறை சார்ந்த புதிய அரசு கட்டிடங்கள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

தஞ்சாவூர் , ஆக.12 -

தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூபாய் 4 கோடியே 37 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய பல்வேறு துறைச் சார்ந்த அரசு கட்டடங்களை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அரசு தலைமை கொறடா முனைவர். கோவி.செழியன், மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்கள்.

இவ்விழாக்களில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் அரசுத் துறைகளின் கட்டடங்களை நேரில் சென்று திறந்து வைத்து மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து அவர்களின் குறைகளை களைய வேண்டும் என அறிவுறுத்தி உள்ளார்கள்.

அதனடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் ஆரியப்படைவீடு ஊராட்சி பம்பப்படையூரில் மக்களுடன் முதல்வர் முகாமினை பார்வையிட்டு, ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் மையக் கட்டடமும், கீழப் பழையார் ஊராட்சியில் ரூ.23.42 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் புதிய இரண்டு வகுப்பறைக் கட்டடமும்,

சுவாமிமலை பேரூராட்சியில் ரூ.70.77 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் புதிய நான்கு வகுப்பறைக் கட்டடமும், திருப்புறம்பியம் ஊராட்சியில் ரூ.41.50 இலட்சம் மதிப்பீட்டில் அரசு

மேல்நிலைப் பள்ளியில் புதிய இரண்டு வகுப்பறைக் கட்டடமும், வாளபுரம் ஊராட்சியில் ரூ.18.55 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோக மையக் கட்டடமும், நீரத நல்லூர் ஊராட்சியில் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய வகுப்பறைக் கட்டடமும்,

ஆதியூர் ஊராட்சியில் ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் கிராம செயலக புதிய கட்டடமும், குருகூர் ஊராட்சியில் ரூ.30.60 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் புதிய இரண்டு வகுப்பறை கட்டடமும், புத்தூர் ஊராட்சியில் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோக மையக் கட்டடமும்,

திருப்பனந்தாள் வட்டம் கொண்டசமுத்திரம் ஊராட்சியில் ரூ.17.35 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோக மையக் கட்டடமும், கன்னரக்குடி ஊராட்சியில் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோக மையக் கட்டடமும், காட்டநகரம் ஊராட்சியில் ரூ.23.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டடமும், நரிகுடி ஊராட்சியில் ரூ.22.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டடமும், துகிலி ஊராட்சியில் ரூ.19.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தானிய கிடங்கு கட்டடமும், மகாராஜபுரம் ஊராட்சியில் ரூ.16.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோக மையக் கட்டடமும்,

திருவிடைமருதூர் வட்டம் எஸ்.புதூர் ஊராட்சியில் ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய புதிய கட்டடமும், ரூ.12.59 இலட்சம் மதிப்பீட்டில் பொதுவிநியோக நியாயவிலை கட்டடமும், இளந்துறை ஊராட்சியில் ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய புதிய கட்டடமும், என ஆக மொத்தம் ரூபாய் 4 கோடியே 37 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பீட்டில் 19 புதிய பல்வேறு துறைச் சார்ந்த அரசு கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. அரசின் திட்டங்களை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.மு.பாலகணேஷ், உதவி ஆட்சியர் (பயிற்சி) உத்கர்ஷ் குமார், மாவட்ட ஊராட்சித் தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, கும்பகோணம் துணை மேயர் சுப.தமிழழகன். மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் சு.க.முத்துசெல்வம், ஒன்றியக் குழுத் தலைவர்கள் காயத்ரி அசோக்குமார் (கும்பகோணம்), பெ.சுபா திருநாவுக்கரசு (திருவிடைமருதூர்), தேவி ரவிச்சந்திரன் (திருப்பனந்தாள்) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில்

# செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் கலைஞர் நூலகம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான், அப்துல் மாலிக் திறந்துவைத்தனர்.

செஞ்சி, ஆக 12 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கலைஞர் நூலகம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி திருவண்ணாமலை சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி .கே. பி .ரமேஷ், உதயகுமார், எம்.டி .பாபு, அண்ணாமலை ,விஜயகுமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாநில திமுக இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர் கலைஞர் நூலகத்தை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றி வைத்தனர். தொடர்ந்து அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாநில இளைஞரணி செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர் நூலகத்தை பார்வையிட்டனர்.

இதில் மாநில விவசாய அணி துணை அமைப்பாளர் செந்தமிழ் செல்வன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,துணை சேர்மன் ஜெயபாலன்,நகர செயலாளர்கள் செஞ்சி கார்த்திக், அனந்தபுரம் சம்பத், மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன், அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன்,செஞ்சி பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செல்வமணி,மேல்மலையனூர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மணிகண்டன், ஒன்றிய கவுன்சிலர் சீனிவாசன், அவைத் தலைவர் வாசு,மாவட்ட பிரதிநிதிகள் துரை திருநாவுக்கரசு, பெருமாள்,அய்யாதுரை, ஜே.எஸ்.சர்தார்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள்கோவிந்தராஜ், குமார், பாலகிருஷ்ணன்,உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

செஞ்சி கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜம்போதி பழனி நன்றி கூறினார்.



நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகம் அருக வைக்கப்பட்டிருந்து கலைஞர் திருஉருவபடத்திற்கு நாகை மாவட்டக்கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, நாகை மாவட்டகக் கழக பொருளாளர் மு.லோகநாதன்,பொதுக்குழு உறுப்பினர் எம்.பாண்டியன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ்.பால்ராஜ், நகரக் கழக நிர்வாகிகள் இரா.முருகையன், வெற்றிலை கடைசிவா, பி.திலகர், சித்திராகுலோத்துங்கன், அபுபக்கர் மற்றும் பலர் உள்ளனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம்,பாப்பிரெட்டிப்பட்டி, நாராயணசாமி மண்டபத்தில் ஊரகபகுதிகளுக்கான ”மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்களில் கோரிக்கை மனு வழங்கிய 307 பேருக்கு ரூபாய் 2 கோடியே 56 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி,நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி,மாவட்ட வருவாய் அலுவலர் பால்ப்ரிஸ்ன்லி ராஜ்குமார்,வருவாய் கோட்டாட்சியர் வில்சன் ராஜசேகர், முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, முன்னாள் மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இன்பசேகரன், ஒன்றிய குழு தலைவர் திருமதி.உண்ணாமலை குணசேகரன்,அரசு அலுவலர்கள்,மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில்

# உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் பற்று அட்டைகளை வழங்கினார்கள்!

புதுக்கோட்ட, ஆக. 12 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (09.08.2024) அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளிலும் மற்றும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியிலும் பயின்று, உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உதவித் தொகை வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார்கள்.

அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், சிவபுரம், ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா தலைமையில்

கலந்துகொண்டு, மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார். இதேபோன்று, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி, கீழாத்தூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்துகொண்டு, மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார்.

முதலமைச்சர் அவர்கள் மாணாக்கர்களின் கல்வி நலனிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்தவகையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அதிக அளவில் மாணவர்கள் சேர்ந்து பயன்பெறும் வகையிலும், மாணவர்களின் உயர்கல்வியை ஊக்கப்படுத்தும் வகையிலும், “தமிழ்ப் புதல்வன்” திட்டத்தினை செயல்படுத்திட மாணவியர்களுக்காக ஏற்கனவே தமிழ்நாடு அரசால் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வரும் “புதுமைப் பெண்” திட்டத்தின் அடிப்படையில் துவக்கி வைக்கப்படும் “தமிழ்ப் புதல்வன்” திட்டத்தில் மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1000/ உதவித் தொகை வழங்கப்படும். தற்போதுவரை புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் 3,28,280 மாணவிகள் மாதந்தோறும் ரூ. 1000/ உதவித் தொகை பெற்று பயன்பெற்று வருகின்றனர். தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று இந்திய அரசு/ தமிழ்நாடு அரசு/ பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் சுமார் 3.28 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசால் 20242025ஆம் நிதியாண்டிற்கு 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் பயன்பெற 65 கல்லூரிகளைச் சேர்ந்த 6,978 தகுதியான மாணவர்கள் உள்ளனர். இதில் ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 39 கல்லூரிகளைச் சேர்ந்த 600 மாணவர்களும் மற்றும் ஆலங்குடி, கீழாத்தூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 20 கல்லூரிகளைச் சேர்ந்த 600 மாணவர்களும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

இந்நிகழ்ச்சிகளில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், மாவட்ட சமூகநல அலுவலர் க.ந.கோகுலப்பிரியா, ஒன்றியக் குழுத் தலைவர்கள் வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), அறங்காவலர் குழுத் தலைவர் தவபாஞ்சாலன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளை அறங்காவலர் முனைவர். கவிதா சுப்பிரமணியன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் த.நந்தக்குமார், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் புவனேஸ்வரி, மாமன்னர் கல்லூரி முதல்வர் பா. புவனேஸ்வரி, அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் இராஜேஸ்வரி, திருமயம் வட்டாட்சியர் புவியரசன், ஆலங்குடி வட்டாட்சியர் பெரியநாயகி, கீழாத்தூர் ஊராட்சிமன்றத் தலைவர் இந்திரா அன்பரசன், அரு.வடிவேல், இரா.கணேசன், எம்.எம்.பாலு, ஆர்.வி. செல்வம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### அரியலூர் மாவட்டத்தில்

# மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், ஆக.12 -

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் 11ஆம் வகுப்பு பயிலும் அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 129 மாணவர்கள், 49 மாணவிகளுக்கும், அரியலூர் நிர்மலா (பெண்கள்) மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 430 மாணவிகளுக்கும், அரியலூர் சி.எஸ்.ஐ மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 81 மாணவர்கள், 16 மாணவிகள் என மொத்தம் 210 மாணவர்கள், 495 மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகள், மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பன், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

விலையில்லா மிதிவண்டி கள் வழங்கும் திட்டம் 202425ஆம் கல்வி ஆண்டில் அரசு, அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்களால் இன்றையதினம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அரியலூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை வாயிலாக அரியலூர் மாவட்டத்தில் உள்ள 64 அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 3,102 மாணவர்கள், 3,377 மாணவியர்கள் என மொத்தம் 6,479 மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 3.13 கோடி மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) சுவாமி முத்தழகன், வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத் துறை அலுவலர் உமா மகேஸ்வரன், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் விஜயபாஸ்கர், மாவட்ட கல்வி அலுவலர்(இடைநிலை) நேசபிரபா, மாவட்ட கல்வி அலுவலர்(தனியார்பள்ளிகள்) (பொ) செல்வவிநாயகம், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் இரா.முருகேசன், நேர்முக உதவியாளர் (மேல்நிலை) முதன்மை கல்வி அலுவலகம் பன்னீர் செல்வம், பள்ளி துணை ஆய்வாளர் பழனிசாமி, அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் கவிதா, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் மா.அன்பழகன், ஆர்.கலியபெருமாள், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், நகர்மன்ற துணைத் தலைவர் கலியமூர்த்தி, நகர நிர்வாகிகள் மாலா தமிழரசன், இராஜேந்திரன், உத்திராபதி மாவட்ட, ஒன்றிய, நகரகழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளையொட்டி சேலம் கிழக்கு மாவட்டம் நரசிங்கபுரம் நகர தி. மு. க. சார்பில் கலைஞர் திருவுருவப்படத்திற்கு நகர செயலாளர் என். பி. வேல்முருகன் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்வில் ராமசாமி, இளவரசு, பிரகாஷ், நகர மன்ற தலைவர் அலெக்ஸ்சாண்டர், அரசு வழக்கறிஞர் சந்திரசேகரன், பாண்டியன், ரமேஷ், ஞானம், அசோக், செல்வகுமார், சாலமன், மற்றும் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.